# மாவைப்பதிகம்.
# மாவை இரட்டைமணிமாலை.

அ. குமாரசுவாமிப்புலவர்

புலவரக வெளியீடு — 3

முதற் பதிப்பு 1888
இரண்டாம் பதிப்பு 1900
மூன்றாம் பதிப்பு 1950

ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையிற்
பதிக்கப்பட்டது

உ

சிவமயம்

# மாவைப்பதிகம்
# மாவை இரட்டைமணிமாலை

சுன்னுகம்

அ. குமாரசுவாமிப்புலவர்

இயற்றியது

புலவரகம்

மயிலணி : சுன்னுகம்

1950

*Copyright*]

[சதம் 12

# முகவுரை

மாவைப் பதிகம், மாவை இரட்டைமணிமாலை என்னும் நூல்கள் எமது தந்தையார் அவர்களால் மாவிட்டபுரத்திற் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியசுவாமி பேரில், 1883-ம் ஆண்டு இயற்றப்பட்டன. மாவை என்பது, மாவிட்டபுரம் என்பதன் மரூஉ மொழியாகும். சோழன் மகளாகிய மாருதப்புரவீகவல்லி என்னும் இராச கன்னிகையின் குதிரைமுகம் போன்ற முகமும், உடல் நோயும் இத்தலத்தில் நீங்கிய காரணமாக இதற்கு மாவிட்டபுரம் என்னும் பெயர் உளதாயிற்று. மா - குதிரை.

இவ்விரு நூல்களிலுமுள்ள செய்யுட்கள் எல்லாம் ஒழுகிய ஓசையும், விழுமிய பொருளும் உடையனவாய்ச் சந்தம் பயக்கும் அநுப்பிராசங்கள் மலிந்து படிப்போர் உள்ளத்தில் பக்தி விளைவிக்கும் பான்மையவாய் விளங்குவன. இந் நூல்களைப் படிப்போர் மாவைச் சுப்பிரமணியக் கடவுளது திருவருளுக்கு இலக்காகத் திகழ்வர் என்பது திண்ணம்.

சுன்னாகம்
விரோதி௵ பங்குனி௴ } கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

உ

கணபதி துணை

# மாவைப்பதிகம்

## காப்பு

வெண்பா

செந்திருவாழ் மாவைத் திருக்கோயில் வீற்றிருக்குங்
கந்தவேள் மேற்பதிகங் கட்டுரைக்க—வந்தனைசெய்
உம்பருக்கும் இம்பருக்கும் உற்றகுறை முற்றொழிக்குங்
கம்பமதத் தும்பிமுகன் காப்பு.

ஆசிரிய விருத்தம்

சீர்மேவு நவரத்ந சிங்கார கோலமிகு
செம்பொனின் மகுடமுடியும்,
திவ்விய குணங்களோ ராறுமாய் வீறுற்ற
செய்யமுக மூவிரண்டும்,
ஏர்மேவு நீபமலர் மாலையொடு செச்சைமலர்
இனமாலை புரளுமார்பும்,
எழின்மேவு மகமேரு கிரிபோல நிலவுற்ற
இணையிலாப் புயமிராறும்,
கார்மேவு கடலிலெழும் அலரிபோல் மயிலின்வரு
கனகமய மேனியோடு
கவின்மேவும் ஆண்டலைக் கொடியும்வேற் படையுமாய்க்
காட்சிதந் தருள்புரிகுவாய்,
பார்மேவு பல்லுயிர்க் குயிராகி நிறைகின்ற
பாரமே சுரவடிவமே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 1

சத்தியநல் நெறிவிட்ட நீயனேன் புரிவினைகள்
தக்கவா றளவை செய்து
தலைவா! நீ கற்பித்த படியன்றி இடையொன்று
தமியேனை அடைவதில்லை
இத்துணி விருந்துமென்? புத்திதிட மின்மையால்
எண்ணாத எண்ணமெண்ணி
யாதுவருமோஎனக் கருதிநித மேங்குவேன்
யாவுநீ அறிதிகண்டாய்!
சத்திதர! வோங்கார! திவ்விய சடாக்கர!
தமோகுணா தீதமுதலே
சரவணோற் பவ! சுர சகாய! பரி சுத்தசிற்
சைதன்னிய ரூபவாழ்வே!
பத்திசெயு மெய்யன்பர் சித்தமிசை குடிகொண்ட
பரிபூர ணாநந்தமே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 2

தராதலா திபராய்க் கராசலா திகளான
சதுரங்க சேனைசூழத்
தலைமைநிலை கூடினும் புலமைமிக நாடினும்
சகதலம் பலவோடினும்
பராவுறாஉ நின்பாத பதுமமே சதமென்று
பற்றுவை யார்களாயின்
பண்டைவல் வினையேகி அண்டரண் டந்தொழும்
பரகதிக் குரியராகார்
சராசரா காரமே யானசத் தியநித்த
சச்சிதா நந்தமுதலே!
தற்பரா! சிற்பரா! கற்பனா தீதனே!
சகலலோ கைகநாதா!
பராபரா! காங்கெயா! பாவகீ தேவகீ
பாலகோ பாலன்மருகா!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 3

ஆருயி ரெனப்படுந் தனிமையேன் கேவலத்
தாணவத் தான்மயங்கி
ஆசைகொண் டுழைதல்கண் டறிவற்ற நிலைபெற்ற
அடிமையின் பாலிரங்கிப்
பேரருள் மிகப்புரிந் தாக்கையொடு போக்கியம்
பிறவுநீ சேர்க்கை செய்து
பின்னரவை நீக்கியே மோக்கவழி யாக்கிடும்
பேறுதரு நோக்கமாகத்
தேருமோ ருருவிலா யாயினுங் கோயிலாய்ச்
செறிதலம் பலவமர்ந்தாய்!
தேவனே! நின்கோயில் நின்பாத நித்தமுந்
தெரிசனஞ் செய்யவைப்பாய்,
பாருமாய் நீருமாய்த் தேயுவாய் வாயுவாய்ப்
பரவெளியு மானஒளியே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 4

இச்சைகள் அடக்கிலேன், கொச்சைகள் கடக்கிலேன்,
ஏகசிவ யோகமார்க்கம்
ஏறிலேன், பெரியர்மொழி தேறிலேன், துதியெடுத்(து)
ஏத்திலேன் முறைகாத்திலேன்
நிச்சமும் பொய்ச்சமொழி கூறுவேன், சீறுவேன்,
நியமநிலை மாறுவேன் நல்
நீதிமொழி மீறுவேன், சூதுமொழி வீறுவேன்,
நீசனேனையும் ஆள்வையோ?
விச்சுவா தீகனே! செச்சையணி வாகனே!
மேவிரு மெல்லியர்பாகனே!
வீரதர சிங்கார! சூரகுல சங்கார!
வேற்கரா! புதபாற்கரா!
பச்சைமா மயிலேறு சச்சிதா னந்தனே!
பாகிரதிக்கு மகனே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே. 5

பேரகங் காரமோ டாருமீ தெனதெனப்
பேசுமம காரநீத்துப்
பேரின்ப மயமான கேவல சுகம்பெறும்
பெற்றியொரு சற்றுமின்றி,
ஊரகந் தேடுவார் போரகஞ் சாடுவார்
ஓடுவார் உடல் வாடுவார்,
உலோபரைப் பாடுவார் மாதரைக் கூடுவார்
உண்மைநிலை உணரமாட்டார்,
சீரகந் தெழுதனிலை ஏரகம் பழனிமலை
செறிபரங் குன்றுமுதலாந்
தேவா லயத்தொண்ட ராவார் தமக்கெலாஞ்
சித்திதர நித்தமுறைவோய்!
பாரகம் பரவுமுப காரகா! தாரகப்
பதகனுருயிர்மாரகா!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 6

நன்னிலை நிறுத்திலேன் புன்னிலை வெறுத்திலேனென்
நகையிகை பொறுத்திலேன்
நானென தெனுஞ்செருக் காலதிக மோகமே
நண்ணுவேன் புகழெண்ணுவேன்
கன்னியர்க ளின்பமே மன்னியநல் நிலையென்று
காணுவேன் மயல்பூணுவேன்
கைப்பொருள்வரும்பொழுதுமெய்ப்புளகரும்புவேன்
கபடநா டகமாடுவேன்
என்நிலையை என்சொல்வேன் ஐம்பொறியின் வழிசெல்
ஏழையேன் பாலிரங்கி [வேன்
ஈசனின் பாதமற வாதவிசு வாசமே
எக்காலு நிற்கவருள்வாய்
பன்னிரு புயாசலா! நின்மலா! சின்மயா!
பாவைஉமை தருபாலகா!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 7

பிணியோடு பசிவறுமை சிறிதேனும் எனைவந்து
பிடித்த லின்மை வேண்டும்,
பெரும!நின் கதைகளைத் துதிகளைக் கேட்டுமகிழ்
பேறுமீந் தருளல்வேண்டும்,
பணியே புரிந்துநினை நணியே வணங்குமொரு
பத்தியுந் தருதல்வேண்டும்,
பாவியே னயினுந் தியனேன் பாலருட்
பார்வைவைத் தாளவேண்டும்,
கணியே! யெனக்குறவர் வரைமே லுதித்தசக
காரணா! பரிபூரணா!
கானவர் கொடிக்குமுயர் வானவர் பிடிக்குமொரு
காந்தனே! மலைவேந்தனே!
பணியாத வர்க்குமருள் தணியா தியானுனது
பாதமெப் போதுமறவேன்,
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 8

நன்பே பொருந்துதவி முன்பே இழந்துபுவி
நண்ணும்விண் ணவர்கள் கோமான்
நற்கருணை பெற்றேற அற்புதா னந்தமாய்
நக்கனெற் றிக்கணுற்று
மண்பா லடைந்துமுறை யின்பா லமைந்துசெரு
மற்றினை யிலாதியற்றி
மன்னுசூர் முதலான தானவர்கள் யாரையும்
மாய்வித்து வானவர்க்கு
விண்பேறு பெறவைத்த வன்பேறு செகதேக
வீரனே! சுகுமாரனே!
விக்கிரம வேல்கொண்டு நக்கீர னுயிர்காத்து
வேண்டுநல் அருள்புரிந்தோய்
பண்பேறு சுரகங்கை மலைமங்கை தரவந்த
பாலனே! சயசீலனே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 9

பைங்கொடி மடந்தையர்கள் தந்தசுக இன்பமே
பாங்குபெறு முத்தியென்றும்
பாவிலோ காயகன் போமைக் கையர்கள்பாற்
பற்றுவைத் தலைவர் இல்லோர்,
சந்ததமு நிலையென்று மண்பொருளுக் காகவே
தலைமறந் தலைவர்இல்லோர்,
சாராம லிவருறவு மேவாது சகவாழ்வு
தன்னையான் தேடவைப்பாய்,
கந்தமுறு நீபனே! செந்திநகர் வாசனே!
கந்தமா தனகிரீசா!
கார்த்திகேயா! விசாகா! குகா! காங்கெயா!
காஞ்சிமா வடியில்வாழ்வே!
பந்தமற மெய்யடியர் வந்துதுதி செய்துயும்
படிவடிவு கோயில்கொண்டோய்!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்தவேளே! 10

உ

கணபதி துணை

# மாவை இரட்டைமணிமாலை

### காப்பு

#### கட்டளைக்கலித்துறை

பொன்னுருமாவைத் திருக்கோயில் மேவிப்புகுந்திருக்கும்
மன்னனை கந்த சுவாமி சலச மலரடியைச்
சொன்னெடிரட்டை மணிமாலை கொண்டு துதிப்பதற்கு
முன்னனை யானை முகவன் திருவடி முன்னுதுமே.

#### வெண்பா

திருவேறும் மாவைநகர்த் தேவே! பரம
குருவே! உமையாள் குமாரா!—மருவாருஞ்
சந்த மலர்க்கடப்பந் தாராய்! தமியேன்றன்
வந்தனையுங் கொண்டருள்வாய் மற்று.

### கலித்துறை

மற்புய தாரக மாரக! துங்க! வரத! அருட்
சிற்பர! அற்புத! சின்மய! தேவசிகாமணியே!
அற்பகனின்றனை அன்றியொன் றுன்னலைத் தவிர்ப்பாய்
உற்பல வாவித் திருமாவை வாழ்வுசெய் உத்தமனே. 2

### வெண்பா

உத்தமராய் நின்புகழை ஓதித் துதிசெய்வார்
சித்தியெது வேண்டினுஞ் சேர்குவரே—முத்துக்
குமரா! திருமாவைக் கோனே! அவுணர்
சமராடுஞ் சத்தி தரா!

### கலித்துறை

தராதலம் போற்றிய மாவைப் பதிஉறை தற்பரனைக்,
குராமலர் சூடிய சுப்ர மணிய குருபரனைப்,
பராவில ராகி முடைஉடல் வீக்கும் பதகரந்தோ!
கராசலம் போலந் தகன்வர நொந்து கலங்குவரே. 4

### வெண்பா

கலங்குவரோ? நின்கோயில் கண்டுதொழ நன்பால்
வலங்கொண்டு வாழ்த்தி வருவார்—இலங்கியபூங்
கொத்துவிரி சோலைக் குளிர்மாவை வாழ்வுகந்த
சத்திதர! காங்கேய! தாம். 5

### கலித்துறை

தாமே தமக்குப் பகைவரன்றோ? பகை தாமென்றுமாய்த்
தோமே செறியும் பொருளினை வாழ்வைத் துராவுடம்பை
யாமே நிலையென நின்றுற வற்ற அறிவிலிகள்
தாமேவு மாவைப் பதியாய்! அமரர் தொழுவள்ளலே!. 6

வெண்பா

வள்ளலெனு முத்துக் குமாரப் பரம்பொருளை
உள்ளுமின் கைகூப்பி ஓதுமின் — தெள்ளுநங்
குருமா மணிசேருங் குண்டுநீர் வாவித்
திருமாவை உறையிடத்துச் சென்று. 7

கலித்துறை

சென்றே அமரர் தொழுமாவை வாசனைச் செப்பருணக்
குன்றே! யெனவரு முத்துக் குமார குருமணியை
நன்றே உறப்பணிக் தன்புடனேவல் நயந்துசெய்வோர்
வென்றே பிறவிப் பெருங்கடல் நீந்துவர் மேவினியே. 8

வெண்பா

மேலான நின்கழலே வேண்டுமென நெக்குருகேன்
பாலான தொண்டு பணிந்தியற்றேன் — ஆலாலம்
அன்று களத்தோ னருள்புதல்வ! மாவைஉறை
சண்முகனே! உய்யுநெறி தா.

கலித்துறை

தாயே! பரம னுதற்கண் தரவருஞ் சண்முகத்துச்
சேயே! வளங்கொளு மாவைப் பதிவதி தெய்வதமே!
நீயே உயிர்க்குத் துணையெனத் தேர்ந்து நினைநினையேன்
நாயேன் பிழைபொறுத் தென்றும் பெருஞ்சுகநல்குதியே.

வெண்பா

நல்குரவு நீங்கும், நலிபிணியுந் தானீங்கும்,
வெல்பகையு நீங்கிவிளிக் கோடும், — சொல்வளங்கொள்
தண்டலைசேர் மாவைத் தலத்தமருஞ் சண்முகனைக்
கண்டுதுதி செய்தக் கடை. 11

### கலித்துறை

கடையேன் பிறவிப் பெருந்துயர் நீங்கிக் கதிஅடையத்
தடையேது மின்றி வரந்தரல் வேண்டுஞ் சராசரங்கள்
அடைவே புரக்கும் அருட்கடலே! அட லாரயிலோய்!
விடையேறி மைந்த! திருமாவை மேவிடும் வித்தகனே! 12

### வெண்பா

வித்தகராய்வாழ்ந்தாலென்? மேதினியைஓர்குடைக்கீழ்
வைத்தவராய்வாழ்ந்தாலென்? மாதேவா!—சத்தியுறுஞ்
செங்கையாய்! மாவைத் திருநகராய்! என்னாதார்
தங்கள்வினை நீங்கிடுமோ? தான். 13

### கலித்துறை

தானே தனக்கு நிகராக வைகிய சண்முகனைக்
கானார் பொழிலெழின் மாவையந் தேவைக் கருத்துள்வையின்
ஊனா ருடம்பு நிலையன்று செல்வம் உறுதியன்று
மானார் கலவிச் சுகமு நிலையன்று மானுடரே! 14

### வெண்பா

மானுடஞ்சேர் நற்பிறவி மற்றுண்டு வாயுண்டு
ஆநறுநீர் பூவுண்டு தோத்திரமுண் (டு)—ஆனவொரு
வித்தகஞ்சேர் மாவைநகர் வேளுண்டு கூற்றுவனால்
எய்த்திடுவீர் நும்மதறி வென்? 15

### கலித்துறை

என்னே வளஞ்செறி மாவையில் தேவனை யான்வணங்க
முன்னே புரிந்த பெருந்தவம் வேத முதல்வனவன்
பின்னே ரிடைவள்ளி காந்த னவன்கிரி வேந்தனவன்
அன்னே எனத்துதித் தன்புசெய்வாருக் கருள்செயுமே.

வெண்பா

அருளே புரியா தகற்றுவையேல் வேதப் [நோய்
பொருளே! யெனைவிட்டுப் போமோ? — மருள்பிணி
சீராரு மாவைத் திருத்தலம்வாழ் முத்துக்கு
மாரா! திருவாய் மலர். 17

கலித்துறை

மலர்மாலை சூட்டிலன் மெய்த்தவ மீட்டிலன் மாயவினைக்
குலமாலை விட்டிலன் கோதுகள் வாட்டிலன் கூரறிவு
வலமாக நாட்டிலன் நீயேனும் உய்யும் வகைகளுண்டோ
நிலமே லுயர்தரு மாவைப் பதிவதி நின்மலனே! 18

வெண்பா

நின்மலனைச் சண்முகனை நித்தியமுத் துக்குமர
னின்மயனை நெஞ்சே! தினந்தினமும் — பன்மலர்கள்
தூவித் திருமாவைத் தொல்பதிசென் றேத்துதிநீ
பாவங்கள் நீங்கும் படி. 19

கலித்துறை

படியேழ் தொழுமெழின் மாவைப் பதிவதி பண்ணவனை
முடியாத பேருண் முத்துக் குமார முழுமுதலைக்
கொடியோ னமன்வரு முன்னே பணிந்து குழைந்துருகி
அடிமேற் கிடத்தி மனமே! தருமுத்தி யாந்திருவே. 20

## விலைப் புத்தகங்கள்

| | |
|---|---|
| தண்டியலங்காரப் புத்துரை | 3 00 |
| யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | 2 50 |
| அகப்பொருள் விளக்கப் புத்துரை | 2 25 |
| தோத்திர மஞ்சரி | 1 25 |
| சிசுபால சரிதம் | 1 00 |
| முருகன் திருப்புகழ்மாலை | 1 00 |
| இரகுவமிச சரிதாமிர்தம் | 75 |
| இராமோதந்தம் உரையுடன் | 60 |
| இதோபதேசம் | .60 |
| வினைப்பகுபத விளக்கம் | 60 |
| சூடாமணி நிகண்டு முதலாவது | 50 |
| ஞானக் கும்மி யேசுமத பரிகாரம் | 25 |
| கலைசைச் சிலேடை வெண்பா அரும்பதவுரையுடன் | 25 |
| மாவைப் பதிகம் | 10 |
| கண்ணகி கதை | 10 |

புலவரகம்
மயிலணி :: சுன்னாகம்